**தலைப்பு 178- தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 16 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பராமரிக்காமை

அமைச்சினால் செலவினப் பேரேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 182,590,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 180,902,958 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,687,042 தொகை அதாவது 0.92 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| மீண்டு வருபவை | 139,098,000 | 138,381,052 | 716,948 | 0.51 |
| மூலதனம் | 43,492,000 | 42,521,906 | 970,094 | 2.23 |
| மொத்தம் | **182,590,000** | **180,902,958** | **1,687,042** | 0.92 |

**(ii) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500,000 மொத்தத் தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) மூன்று செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 24 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையிலான விச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17801 | 4,000,000 | 3,963,767 | 800,000 | 1,874,700 | 8,000,000 | 5,824,871 |

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 420,507 கூட்டுமொத்தமாக இருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அந்த அறிக்கை 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப் பிரமாணம் 1646 | | பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் ஒவ்வொரு மாதத்தினதும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் |

| | | | |
|---|---|---|---|
| | | | தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 1647(ஆ) | | வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 104(3)(4) | 785,075 | ஏற்பட்ட நட்டம் தொடர்பான ஆரம்ப அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை |

(ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம்

-----------------------------------

| | | |
|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை

-----------------------------------

| | | |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 14 ஆம் திகதிய 174 ஆம் இலக்க சுற்றறிக்கை | | ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு 1 இன் கீழ் நிலையான சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 06 | 05 | 01 |
| மூன்றாம் நிலை | 09 | 03 | 06 |
| இரண்டாம் நிலை | 768 | 230 | 538 |
| ஆரம்ப நிலை | 21 | 18 | 03 |
| மொத்தம் | 804 | 256 | 548 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 548 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.